# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்)

**ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜயமான்ன அவர்களால் 2016, யூன் மாதம் 07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.*

*(2016, மே மாதம் 16 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது*

---

[ *112 ஆம் சட்டமூலம்* ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

2-PL 009991 - 225 (2016/06)

## ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

''ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம்'' என அறியப்படுவதும் அழைக்கப்படுவதுமான சம்மேளனம் ஒன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க எல்லாக் கருமங்களையும் காரியங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டுநடாத்துவதற்குமென இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட சம்மேளனம் எக்குறிக்கோள்களுக்கும், கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாக கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்குகந்ததாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “சம்மேளனம்” எனக் குறிப்பிடப்படும்) ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ளவர்களும் அத்துடன் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தில் இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனையாட்களும் ''ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம்'' என்ற பெயரின்கீழும், மகுடத்தின் கீழும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பிடப்படும்) இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும்.

2-PL 009991 - 225 (2016/06)

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள், பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) மகளிர் மற்றும் பிள்ளைகளுக்கு விசேடமாக அவர்களைப் பற்றிய நல்லெண்ணங்களை வளர்க்கும் முகமாக கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல் ;

(ஆ) மகளிர்களின் வாழ்க்கைநெறியை மேம்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடல் ;

(இ) மகளிர் மற்றும் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாக்க அது சம்பந்தமான ஆவணங்களை கோவையிட்டு அவர்களது பிரச்சினைகளைத்தீர்க்கும் முகமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கி அவைகளுக்கான தீர்வைக் காணல் ;

(ஈ) மகளிர் மற்றும் மகளிர் சங்கங்களின் சுதந்திர ஆராய்ச்சிளை நடாத்துதலும் அதற்குரிய வாய்ப்புக்களை வழங்குதலும் ;

(உ) இன, மத, அரசியல் பேதமின்றி மகளிர் மற்றும் மகளிர் சங்கங்களிடையே அன்னியோன்னியம் மற்றும் நல்லெண்ணத்துடன் பழக பயிற்சியளித்தல் ;

(ஊ) சமூகம் மகளிர்களின் பொறுப்புக்களை உணர்ந்து செயற்பட உதவுதல் ;

(எ) சங்கத்தின் குறிக்கோள்களை மற்றும் நோக்கத்தை உடைய உள்ளூர் மற்றும் வெளியூர் கூட்டிணைக்கப்பட்ட மற்றும் கூட்டிணைக்கப்படாத அமைப்புக்களிடம் இணைந்து செயற்படுதலும் உதவுதலும், உதவிகளை பெற்றுக்கொள்ளல் அதில் உறுப்பாண்மைகளைப் பெற்றுக்கொள்ளல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் ஏதேனுமொன்றை எய்துவதற்கு அவசியமானவாறான அல்லது இடைநேர் விளைவான வேறேதேனும் காரியங்களையும் கருமங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திற்கு அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றின் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், கொண்டுநடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், சேகரிக்கவும், அதன் நிதியங்களை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்துதல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கஞ்செய்தல் ஆகியவற்றுக்கான தத்துவங்களும் அடங்கும்.

உறுப்பினர் பெயர்ப் பதிவேடு.

**5**. இச்சட்டம் ஆரம்பமாகும் தேதியன்று கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்ற ஒவ்வோராளும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக இதன் முன்னர் முறையாகச் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற ஒவ்வோராளும் தமது பெயரையும் முகவரியையும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளின்கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு விபரங்களையும் பதிந்துகொள்ளவேண்டிய பெயர்ப் பதிவேடொன்றைக் கூட்டுத்தாபனத்தின் முகாமைச்சபை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் கட்டுப்பாடும் நிருவாகமும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய (இதனகத்துப்பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கிணங்க உறுப்பினர்களுக்கிடையே தேர்ந் தெடுக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான ஆளுநர்களை கூட்டுத்தாபனம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்றவர்கள் கூட்டுத்தாபனத்தினது முதலாவது சம்மேளனத்தின் நிருவாக சபை உறுப்பினர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) சம்மேளனம் தேவையெனக் கருதின் புதிய உறுப் பினர்களை நியமிக்கவும் பேரவைக்கு அதிகாரம் உண்டு.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**7**. (1) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களை சேர்த்துக் கொள்ளுதல், மீளப் பெறுதல் அல்லது வெளியேற்றுதல் என்ப வற்றுக்காகவும், பதவிதாங்குநர்களையும் குழுவின் உறுப் பினர்களையும் தெரிவுசெய்வதற்காகவும் பொதுவில் கூட்டுத் தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்கும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும், இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் பொதுக் கூட்டமெதிலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கினருக்கு குறையாத உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு குழுவினால் ஆக்குதல் கூட்டுத் தாபனத்துக்கு சட்டமுறையானதாதல் வேண்டும் அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும் அதேபோன்ற முறையில் அவை மாற்றப் படலாம், திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் எழுத் திலான சட்டத்திற்கும் அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக் கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம் படுத்துவதற்கும், முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்வதற்கும் புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

*சம்மேளனத்தால் செலுத்தப்படவுள்ளனவும் சம்மேளனத்திற்கு செலுத்தப்படவுள்ளனவுமான கடன்கள்.*

**8**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிதியத்துக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப் படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நிதியத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுவதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதிகள்.

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்துக்காகவும் கூட்டுத்தாபனத்தின் கணக்காலும் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது கட்டணங்களாக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் நிறுவனம் தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**10.** (1) முகாமைச் சபையானது கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட மற்றும் செலவழிக்கப்பட்ட எல்லாப் பணங்கள் பற்றியும் முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஆகக்குறைந்தது ஒருதடவையாவது பரிசீலனை செய்யப்படுதலும் கணக்காய்வு செய்யப்படுதலும் வேண்டுமென்பதுடன், வருமான செலவினக் கணக்குகளினதும் ஐந்தொகைகளினதும் செம்மை, கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினரொருவரான கணக்காய்வாளர் ஒருவரால் அல்லது கணக்காய்வாளர்களினால் அத்தாட்சிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடு செய்யக் கூடியவாறான முகாமைச் சபையின் அத்தகைய எண்ணிக்கையைக்கொண்ட ஆட்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன் அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அப்படிக் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**12.** கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, சந்தாப்பணம், நன்கொடை, மானியக்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறேதேனும் அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களை இந்தச் சட்டத்தின் நோக்கத்துக்காக கூட்டுத்தாபனத்தின் தற்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமையப் பெறுவதற்கும் வைத்திருப்பதற்கும் சட்டத்தில் இயலுமாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களையும் விற்பதற்கும், ஈடுவைப்பதற்கும், குத்தகைக்குக் கொடுக்கவும், பரிமாறிக்கொள்ளவும், வேறுவகையில் கையுதிர்ப்பதற்கும் ஆன முழுத்தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

*கலைப்பின் போது எஞ்சியுள்ள சொத்து.*

**13.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் கடன்கள் பொறுப்புக்கள் அனைத்தையும் திருப்திப்படுத்திய பின்னர் ஏதேனும் சொத்து எஞ்சியிருந்தால் அத்தகைய சொத்து கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டிருக்கும் பிற நிறுவனம் அல்லது நிறுவனங்கள் சிலவற்றுக்கு, அந்நிறுவனத்தின் அல்லது நிறுவனங்களின் உறுப்பினர்களிடையே ஏதாவது வருமானத்தை அல்லது சொத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகள் மூலம் தடுக்கப்பட்டிருப்பின், கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*